ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1563/2 - 2008 අගෝස්තු 18 වැනි සඳුදා - 2008.08.18
1563/2 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2008, ஓகத்து 06.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. 1990 ஆம் ஆண்டு சனவரி மாதம் 5 ஆந் திகதிய 591/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும் 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 1511/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான 1990 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டம் அதன் 18 ஆம் பந்தியில் அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (iv) ஆம் விடயத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(iv) பீடத்தில் உள்ளடக்கியுள்ள கற்கைத் துறைகளின் எல்லா நிரந்தர சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அத்துடன் விரிவுரையாளர்கள் ;".

09- 68

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.